இவர்களது மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இரு நிமிடம் எழுந்து நின்று மௌனமாயிருக்குமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

Accordingly, all the Members stood in silence for a couple of minutes.

II. CONDOLENCE RESOLUTION ON THE DEATH OF THIRU M. ETHIRAJULU, A SITTING MEMBER OF THE COUNCIL

Mr. CHAIRMAN: I have to inform the House, with regret, of the sudden and untimely demise of Thiru M Ethirajulu, a sitting Member of this House, on 18—9—1970. I now call upon the Hon. the Chief Minister (Leader of the House) to move the Condolence Resolution.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, "இந்த அவையிலே உறுப்பினராக இருந்த திரு எம். எத்திராஜுலு அவர்கள் திடீரென்று இயற்கை எய்தியது குறித்து இந்த அவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றது. அன்னாரது குடும்பத்திற்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக்கொள்ளுகின்றது" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, மறைந்த நண்பர் திரு. எத்திராஜுலு அவர்கள் இந்த மன்றத்தில் மிகுந்த அக்கறையோடும் ஆர்வத்தோடும் நாட்டுப்பணியாற்றிய நல்லவர்களில் ஒருவராவார்கள். சலவைத் தொழிலாளர்களுடைய முற்போக்குக்காக எந்த அளவு அவர் பாடுபட்டார் என்பதும், அவர்களுடைய முறையீடுகளையெல்லாம் உடனுக்குடன் இம்மா மன்றத்திலே எடுத்துவைத்து, அவைகளுக்கெல்லாம் தக்க நிவாரணம் தேடவேண்டுமென்பதில் எவ்வளவு முனைப்போடு இருந்தார்கள் என்பதையும் நாம் அனைவரும் வெகு நன்றாக அறிவோம். திரு. எத்திராஜுலு அவர்கள் இந்த அவையில் பேசுகிற நேரத்தில் அவருக்கே உரிய இயல்பான கடுமை அவருடைய பேச்சிலே இருந்தாலும், பேசி முடித்த பிறகு அதைவிட கனிவோடு எதிர்த் தரப்பில் இருப்பவர்களிடையே பழகுவதில் இனிய சுபாவமும் அன்புள்ளமும் கொண்டவர்களாவார்கள். பொது வாழ்க்கையில் எவ்வளவுதான் கொள்கை மாச்சர்யங்கள், கட்சி வேறுபாடுகள் இருந்தாலும்கூட, அவைகளெல்லாம் வாதத்திற்காக என்கிற அளவோடு நிறுத்திவிட்டு, பழகுகிற நேரத்தில் மிகுந்த மனிதாபிமானத்தோடு பழகுகிற தன்மை மிக மிக இன்றியமையாததாகும். அந்தத் தன்மைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்கியவர் மறைந்த திரு எத்திராஜுலு அவர்கள் ஆவார்கள்.

அவர் திடீரென்று இயற்கை எய்தினார்கள். முதல் நாள் வரையில் பொதுப்பணிகளில் அவர் ஈடுபட்டிருந்தார்கள். இங்கே கோட்டைக்கு வந்து அமைச்சர்களுடைய அறைகளுக்கு எல்லாம் சென்று மறுநாள் காலையில் 11 மணிக்கு மீண்டும் தான் கொண்டு வந்த அலுவல்களை நிறைவேற்றித் துணைபுரியவேண்டும் என்று அலுவலர்களுக்குச் சொல்லிவிட்டுச் சென்றார். 11 மணிக்கு மறுநாள் வருவதாகச் சொல்லிச் சென்றவர் காலை 9 மணிக்கு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு 11 அல்லது 11-30 மணி அளவில் உயிர் துறந்தார் என்ற செய்தி, திடுக்கிடத்தக்கதாயும் அதிர்ச்சியை உருவாக்கிடத் தக்கதாயும் அமைந்தது. அவர் இந்த மாமன்றத்தில் அமர்ந்திருந்த இடத்தை நோக்குகிற

நேரத்திலும் அவருடைய குரல் இன்னும் இந்த மாமன்றத்திலே எதிர் ஒலிப்பதுபோல் தோன்றுகிற தன்மையைப் பார்க்கிறபோதும் நம்மால் அந்தப் பிரிவைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

வாழ்க்கையின் மிகப் பெரும்பகுதியை பொது வாழ்வுக்காக, அவர் ஈடுபட்ட இயக்கத்திற்காக, அவர் எந்தக் கொள்கைக்காக தன்னை ஆட்படுத்திக்கொண்டாரோ அந்தக் கொள்கைக்காக, ஈடுபடுத்தி இதயபூர்வமாக அதனுடைய வெற்றிக்காகப் பாடுபட்டவர்களிலே ஒருவராவார். அவர் இந்த மன்றத்திற்கும் நல்ல மரபினை வகுத்துத் தருகிற வழியிலே நடந்துகாட்டி, இம்மாமன்றத்திற்குப் பெருமை தேடித் தந்தவராவார். அவருடைய இழப்பு இம்மன்றத்தைப் பொறுத்தவரையில், ஏன் இந்த நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய இழப்பாகும். இந்த இழப்பை நாம் ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக்கொள்வதன்மூலம் சமாளித்துக்கொள்வதோடு, அவருடைய குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்று கூறிக்கொண்டு அமைகிறேன்.

4-10 P. m. ■ திரு கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன். சென்ற கூட்டத் தொடரில் நமது நண்பர் திரு. எத்திராஜுலு அவர்கள் நம் கூடவே இருந்து முழக்கம் செய்துகொண்டிருந்தார். அவர் மிகவும் எளிய குடும்பத்தில் பிறந்து எளிய ஜனங்களுக்காகவே பாடுபட்டுக்கொண்டிருந்தார். சலவைத் தொழிலாளர்களுக்காக மட்டும் அவர் பாடுபட்டுக்கொண்டிருக்கவில்லை, மீனவர் சமூகத்திற்கும் நாள் தவறாமல் ஏதேனும் ஒரு நன்மையைச் செய்த வண்ணமாக இருந்தார். கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரையில் உள்ள கடலோரப் பகுதி கிராமங்களுக்கெல்லாம் அவர் சென்றிருக்கிறார். எல்லா மீனவர்களுடைய கிராமங்களுக்கும் சென்று அவர்களுடைய குறைகளைக் கேட்டு அறிந்து அடிக்கடி அவைகளைப்பற்றி இங்கே கேள்வி கேட்டுக்கொண்டிருப்பார். முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, அவர் இறந்ததற்கு முதல் நாள் கோட்டைக்கு வந்து பல அமைச்சர்களையும் கண்டு பேசி, நமது கவுன்சில் காரியாலயத்திற்கும் வந்து போயிருக்கிறார். இங்கே வந்தபோதும் கூட, தன் நெஞ்சைப் பிடித்துக்கொண்டே பேசிக்கொண்டிருந்ததாக நண்பர்கள் கூறினார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பே அவருக்கு இருதய நோய் ஏற்பட்டிருந்தும் கூட, அது இருதய நோய் என்று உணராமலேயே, நடந்துகொண்டும் அலைந்து கொண்டும் இருந்திருக்கிறார். கடைசியில் அவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அப்போது நான் போயிருந்த சமயத்தில், அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர்கள், ''அவருக்கு இரண்டு நாட்களுக்கு முன்பே இருதய நோய் ஏற்பட்டுவிட்டது. அப்போதே அவர் வந்திருக்கலாம். அதை உணராமல் அதை முற்றவிட்டபிறகு வந்ததால், வந்த சில மணி நேரத்திற்கெல்லாம் உயிர் பிரிந்துவிட்டது. எங்களால் அவருடைய உயிரைப் பாதுகாக்க முடியாமல் போய் விட்டது'' என்று வருந்தினார்கள். கடைசியில் ஊருக்கு சடலத்தைக் கொண்டு சென்றார்கள். அங்கே மயானக்கரையில் மாண்புமிகு திரு. என். வி. என். அவர்களும் வந்திருந்தார்கள், நானும் போயிருந்தேன். மிகவும் துக்ககரமான சம்பவம். அவருடைய வீட்டிலிருந்து சடலம் மயானத்திற்குக் கொண்டு செல்லப்பட்டபோது, உடல் நலக் குறைவோடு இருந்த திரு. இளம்வழுதி M.L.A. அவர்கள் அதன் கூடவே மூன்றரை மைல் தூரம் நடந்தே வந்தார்கள். அன்றுதான் மனம் விட்டுப் பேசினேன். அதை நினைக்கும்போது என்னுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அன்று மூன்றரை மைல் கூடவே நடந்துவந்த திரு. இளம்வழுதி இன்று நம்மிடையே இல்லை. ஒரே ஊரைச் சேர்ந்த இரண்டு நண்பர்கள், மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த

வர்களாக இருந்தும் கூட, அந்த இருவரும் நண்பர்களாக இருந்து, கலந்து ஊருக்கு நன்மை செய்துவந்ததாக திரு இளம்வழுதி அவர்கள் அன்று பிரேத ஊர்வலத்தின்போது சொன்னார்கள். மயானத்தில் அன்று பேசும்போது கூட பலருடைய வேண்டுகோளுக்கு இணங்க மாண்புமிகு திரு என். வி. நடராசன் அவர்கள், முதலமைச்சர் அவர்களைக் கலக்காமலே ஒன்றைப்பற்றிச் சொன்னார்கள். மறைந்த திரு எத்திராஜுலு அவர்கள் எந்த சமுதாயத்திற்கு இரவும் பகலும் அயராமல் பாடுபட்டுக்கொண்டிருந்தாரோ அந்த சமூகத்தைச் சேர்ந்தவரை, எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், மேலவை அங்கத்தினராக நியமிக்கும்படி முதலமைச்சரிடம் நான் சொல்கிறேன் என்று அன்று மாண்புமிகு திரு. நடராசன் அவர்கள் கூறினார்கள். அதை அவசியம் செய்யவேண்டுமென்று உறுதி அளிப்பதைப் போன்று சொன்னார்கள். அது நிறைவேற்றப்பட்டது மனதிற்கு ஆறுதலைக் கொடுக்கிறது. எத்தனை பேர் உழைத்தாலும், திரு எத்திராஜுலுவைப் போல அவ்வளவு தூரம் பாடுபடக் கூடியவர்களாக இருப்பது கஷ்டம். எப்படியோ அவர்களது வழியில் சென்று அந்த சமுதாயத்திற்குப் பாடுபடுவதனால் அவருடைய ஆத்மா சாந்தியடையும். அவருடைய குடும்பத்தாருக்கும் சமூகத்தாருக்கும் என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

✱ **திரு ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் திரு எத்திராஜுலு அவர்களுடனே பக்கத்தில் அமர்ந்து இந்த சபையிலே இருக்கக்கூடிய ஒரு பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவர்கள் இறப்பதற்கு முதல் நாள் நான் சென்னையில் இருந்தேன். அன்றைய தினம் இரவு நெடுநேரம் பேசிக்கொண்டிருந்த பொழுது 'நாம் இருவரும் அண்மையில் அமர்ந்திருந்தாலும் இருவருடைய கண்ணோட்டமும் அந்த நேரத்தில் மாறியிருந்தது. இனிமேல் நாம் நெருங்கி ஒரே கருத்தோடு சேவை செய்ய வேண்டும். அதற்காக நாம் எல்லோரும் ஒருமனதோடு வேலை செய்ய வேண்டும்' என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். திரு எத்திராஜுலு அவர்களுடையபேச்சைப் பற்றி அமைச்சர் அவர்களும் எதிர்க் கட்சித் தலைவரும் சொன்னார்கள், அவர் பேசும்போது எப்போதுமே உணர்ச்சி பூர்வமாகவே பேசுவார் என்பது நாம் எல்லோரும் அறிந்த விஷயம். எந்த விஷயத்தைப் பற்றிப் பேசினாலும், உணர்ச்சியோடு கலந்துதான் பேசுவார். சபை முடிகிற பொழுதுதான் எப்போதும் அவருடைய பேச்சை ஆரம்பிப்பது வழக்கம். ஏழு மணி ஆகிவிட்டால் கூட தொடர்ந்து பேசிக் கொண்டேயிருப்பார் உணர்ச்சி வேகத்தில். வெளியிலே என்னைப் போன்றவர்கள் அமர்ந்திருப்போம். திரு. எத்திராஜுலு பேசுகிறார் என்றால் அவர் பேசுவதும், அமைச்சர்கள் பேசுவதுமாக சபையே பரிமளிக்கிற நிலைமையை நாங்கள் காண்பது வழக்கமாக இருந்தது. எதையும் அறிவு பூர்வமாக மட்டுமல்லாமல் உணர்ச்சி பூர்வமாகவும் அணுகிப் பேசக்கூடியவர் அவர். திரு எத்திராஜுலு அவர்களைப் பொறுத்த வரையில், அவர் எங்கு சென்றாலும் அவர் வருகிறார் என்பதற்காக அங்கங்கே நண்பர் குழாம் காத்துக்கொண்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். தஞ்சைக்கு அவர் வருகிறார் என்றால், அவருக்காக பத்து பேர்கள் அங்கே காத்துக்கொண்டிருப்பார்கள். அவர் வருகிற இடங்களிலுள்ள நண்பர்களுக்கு அவர்களுடைய பிரச்னைகளைப் பற்றி முன்னரே எழுதி அதற்கான காரியங்களைச் செய்யும் அவருடைய நல்ல பண்பைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அண்மையில்தான் அவர்கள் இந்த சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்கள். ஆறு ஆண்டு காலம் இருந்து பணிபுரியும் பாக்கியத்தை அவர் பெறவில்லை என்ற அனுதாபம் நமக்கு மனப்பூர்வமாக உண்டு என்பதைத் தெரி

வித்துக் கொண்டு, அவருடைய ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று கூறி, அவருடைய குடும்பத்தாருக்கு நம் துக்கத்தைத் தெரிவித்து என்னுடைய வார்த்தையை முடிக்கிறேன்.

Thiru A R. DAMODARAN: **Sir, it is with a sense of profound grief and sorrow that I rise to associate myself with the sentiments that have been expressed by the Hon. the Leader of the House and the Leader of the Opposition. We have been singularly unfortunate in South Arcot District in losing very able legislators since 1967. We lost our Minister for Agriculture, Thiru N. Govindaswamy; we have lost our friend Thiru Elamvazhuthi, a prominent Member of the Legislative Assembly. We have lost Thiru M. Ethirajulu, who was a champion of the Backward Communities and I well remember that on many occasions when he particpated in the debates in this House the one theme that used to run through all his speeches was to get his community — washerman community — included in the list of Scheduled Castes and Tribes. Not a single opportunity did he miss to press this issue. He was the only Member from the Opposition whose speeches were highly critical of the Government and one which would provoke the utmost controversy in the House. He was politically very alive and he functioned as a Member of the Opposition should, without showing any mercy and without asking for mercy also. I was closely acquainted with him for the past 15 years and could testify to the fact that he took great interest in all public activities, in the starting of our College in Cuddalore and in the championing of all the causes which we considered very important from our point of view. His death has not only removed from the Council a very prominent member of the Congress Party and one of its most distinguished advocates, but also, as far as our district is concerned, his demise has created a void which cannot be so easily filled. On that day, the washerman who comes to my house every day was literally in tears, wept and said, "How will we ever find a leader to lead us and get for us the various facilities for which Thiru Ethirajulu was fighting?" I hope, Sir, there would be others who will champion the cause of the Backward Communities and although it might not have been possible for us to agree with all the sentiments that he expressed in this House, there can be very little doubt that he was extremely honest, sincere and straightforward in his approach. It is, therefore, with a real feeling of grief and sorrow that I associate myself with the sentiments that have been expressed and I wish to convey to the members of the bereaved family my heart-felt condolence.**

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாட்சி: தலைவரவர்களே, இந்த மன்றத்தின் உறுப்பினராக நம் மத்தியில் இதுவரை இருந்து மறைந்த
4-20 திரு எத்திராஜுலு அவர்கள் எனது ஊரான கடலூரைச்சேர்ந்தவர்.
p.m. அவர் ஒரு சிறந்த ஊழியர். பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, அதிலும் குறிப்பாக அவருடைய இனத்தைச் சேர்ந்த சலவைத் தொழிலாளர்களுக்காக, அரும்பாடுபட்டவர். சலவைத் தொழிலாளர்களுடைய முன்னேற்றத்திற்காக என்னென்ன வழிவகைகளைச் செய்ய வேண்டுமோ, அவைகளையெல்லாம் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து மாவட்ட ரீதியில் மட்டுமின்றி, மாநில ரீதியில் மட்டுமின்றி, அகில இந்திய ரீதியிலும் அந்தக் கோரிக்கைகளையெல்லாம்

வற்புறுத்தி வந்தார். அவரை நான் இளமையிலேயிருந்தே நன்ருக அறிவேன். என்னிடத்தில் அதிக நெருக்கமாகப் பழகியிருந்தார். அவர் தன்னுடைய தொண்டினை இன்னும் பரிபூரணமாக நிறைவேற்ற முடியாத வகையில் அகாலமாக நம் மத்தியிலேயிருந்து மறைந்து விட்டார். இது போலவே கடலூர் இன்னும் இரண்டு சிறந்த தொண்டர்களைக் கடந்த காலத்தில் இழந்திருக்கிறது. அவர்கள் மறைந்த திரு இளம்வழுதி அவர்களும், திரு ஏ. கோவிந்தசாமி அவர் களுமாவார்கள். வெகு குறுகிய காலத்திலே அவர்கள் எல்லாம் நம்மை விட்டுப் பிரிந்தது எங்கள் மாவட்டத்திற்கே ஒரு பெரிய நஷ்ட மாகும். இவர்களுடைய தொண்டு பெரிதும் பலனளித்து வந்தது. ஆனுல் அந்தத் தொண்டு துரதிருஷ்டவசமாக தொடர்ந்து கிட்டா மல் போய்விட்டது மிகுந்த வருத்தத்திற்குரிய விஷயம் என்று கூறிக் கொண்டு, அன்னுர் குடும்பத்திற்கெல்லாம் என்னுடைய அனுதாபச் செய்தியினையும் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவர் அவர்களே, இந்த அவையில் உள்ள எல்லா உறுப்பினர்களுடைய அன்பையும் கவர்ந்து நம்மிடையே உறுப்பினராக இருந்த நமது அருமை நண்பர் திரு எத்திராஜுலு அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டது நம் எல்லோருக்கும் மிகவும் வேதனையளிக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சியாகும். எனக்கு முன்னே பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரு எத்திராஜுலு அவர்களின் பேச்சில் கடுமை இருக்கும் என்று குறிப்பிட்டார்கள். பலமுறை நான் பேசிய பேச்சைக் கடுமையாகத் தாக்கிப் பதில் பேசியவர் திரு எத்திராஜுலு அவர்கள். அதைப் போலவே நானும் அவர் பேச்சைப் பலமுறை சாடிப் பேசியிருக்கிறேன். ஆனுல் பேசிவிட்டு வெளியே சென்றதும் தோளில் கைபோட்டு, அன்புடன் அளவளாவு வார்கள். கொள்கை அடிப்படையில் பேசப்படும் பேச்சுக்கள் வேறு, நட்பு வேறு என்ற அடிப்படையில் நல்ல சித்தாந்தத்தை வளர்க்க வேண்டும் என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமைந்தவர் அவர். அவருடைய பேச்சில் தயவு தாட்சண்யம் இருக்காது, துணிச்சல் இருக்கும். பேச்சில் கடுமையாகத் தாக்கும் பாணி இருக்கும். அவர் தன் வாழ்நாளில் பெரும் குறிக்கோளாகக் கொண்டதெல்லாம் தான் சார்ந்த சலவைத் தொழிலாளர்களுடைய பிரச்னையைப் பற்றிய தாகும். சலவைத் தொழிலாளர்கள் யாவரும் 'மோஸ்ட் பேக்வர்டு' என்ற பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டதாக அரசு பிரகடனப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை, ஒரு முறையல்ல, இரு முறையல்ல, பல முறை இந்த மாமன்றத்திலே அவர்கள் வற்புறுத்தியிருக்கிருர்கள். அவர் பேசியதற்குப் பிறகு தான் 'பேக்வர்டு கிளாஸ் கமிஷன்' அல்லது, 'பிற்பட்டோர் நலக் குழு' என்ற ஒன்றை அரசு நியமித்தது. அந்தக் குழுவிடத்திலே நான் ஒருமுறை சாட்சியம் அளிக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்போது பேச்சுவாக்கிலே நான் குறிப்பிட்டேன். ''இந்தக் குழு அமைவதற்கே காரணகர்த்தாவாக இருந்தவர்கள் இரண்டு பேர்கள். இதற்கு அடிப்படைக் காரணமாக, காரணகர்த்தா வாக திரு எத்திராஜுலு அவர்கள் இருக்கலாம். அடுத்தது நான் தான்'' என்றேன். இப்படிப் பலமுறை சலவைத் தொழிலாளர் களுடைய பிரச்னையை சட்டமன்றத்திலே அவர் வற்புறுத்தியிருக் கிருர். அதைப் போலவே முஸ்லீம்கள் யாவரும் பிற்படுத்தப்பட்ட வர்கள் என்று பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்று பலமுறை நான் இங்கே வற்புறுத்தியிருக்கிறேன். நாங்கள் இருவரும்தான் இந்தப் பிரச்னையைப் பற்றி இங்கே திரும்பத் திரும்பப் பேசினேம். அதனுடைய பலனுகத்தான் ''பேக்வார்டு கிளாஸ் கமிஷன் இப்போது நியமிக்கப்பட்டிருக்கலாம்'' என்று நான் அப்போது குறிப்பிட்டேன். இன்றைய தினம் அவருடைய மறைவுக்கு அஞ்சலி செலுத்தும்

வகையில் நாம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி நாம் நம்முடைய மரியாதையைச் செலுத்த முற்பட்டிருக்கிறோம். இது அவருக்கு உரிய மரியாதைதான் என்றாலும் கூட, அவர் சார்பில் நான் இந்த அரசாங்கத்திடம் ஒன்றைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவர் எந்தக் கோரிக்கையைத் தன் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு இங்கே வலியுறுத்தி வந்தாரோ அந்தக் கோரிக்கையை, அதாவது சலவைத் தொழிலாளர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலைச் சார்ந்தவர்கள் என்று அறிவிக்கக் கோரும் கோரிக்கையை ஏற்று, அவ்வாறே பிரகடனப்படுத்த வேண்டும். அரசு அதை அனுதாபத்துடன் ஆராய்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மிகப் பணிவாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதைப் போன்றே முஸ்லீம்கள் எல்லோரும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்ற என் கோரிக்கையையும் இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

Mr. CHAIRMAN: Out of context, please.

திரு கே. எஸ். அப்துல் வகாப்: அத்துடன் அவர் மறைவிற்காக அவருடைய குடும்பத்தாருக்கு நான் சார்ந்த முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு என் உரையை நிறைவு செய்கிறேன்.

திரு டி. கே. சண்முகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு எத்திராஜுலு அவர்கள் இந்த மன்றத்திற்கு நான் வருவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே என்னோடு நெருங்கிப் பழகிய நண்பர்களில் ஒருவர். இந்த மன்றத்திலே அவர்கள் இருந்து வாதாடிய திறமையை எல்லாம் நாம் அனைவரும் பார்த்த சமயத்தில், உண்மையான உணர்ச்சி கலந்த ஒரு எதிர்க் கட்சி உறுப்பினர் எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு அவர் முழு இலக்கியமாக விளங்கினார் என்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தோம். முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அவர்கள் எவ்வளவு உணர்ச்சியோடு இங்கே பேசினாலும், அந்தப் பேச்சுக்குப் பிறகு அவர் கனிவு நிறைந்த அன்பும், பரிவு கலந்த உள்ளமும், நமக்கு நன்றாகத் தெரிந்த முறையில் பழகி வந்த பண்பும் நாம் உணர்ந்த ஒன்று. அவர் முன்பு தமிழரசுக் கழக உறுப்பினர்களில் ஒருவராக இருந்தார் என்பதால் நான் அடிக்கடி அவரோடு வேடிக்கையாகப் பேசிவருவதுண்டு. "நீங்கள் எங்கிருந்தாலும் உங்களுடைய சமுதாயத்திற்கு நன்றாக உழைத்து வருகிறீர்கள்," என்று அடிக்கடி அவரைப் பாராட்டுவது வழக்கம். சலவைத் தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவருடைய சமுதாயத்திற்கு நல்ல முறையில் பணியாற்ற வேண்டுமென்ற உண்மையான உணர்ச்சியுள்ள ஒரு தொழிலாளியாக அவர் இருந்தார் என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அவர் மறைவு அவருடைய சமூகத்திற்கு ஒரு பேரிழப்பு என்பதில் சந்தேகமேயில்லை. தமிழரசுக் கழகத்தின் சார்பில் என்னுடைய அனுதாபத்தையும் இணைத்து அவருடைய ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று கூறி அமைகிறேன்.

* **திரு எம். ஆறுமுகசாமி**: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு எத்திராஜுலு அவர்கள் இந்த அவையிலே நீண்ட நாள்
4-30 P. m உறுப்பினராக இருந்தபோதிலும், நான் மிகவும் குறைவான நாட்களே அவரோடு பழகியிருக்கிறேன். அந்த நாட்களிலே அவை எவ்வளவு குறைவான நாட்களாக இருந்தபோதிலும், அவரோடு பழகியபோது, அவரிடத்தில் இருந்த சில சிறப்பியல்புகளை நான் ரொம்பத் தெளிவாக உணர முடிந்தது. எந்நேரமும் சுறுசுறுப்பாக இருப்பார். எதிர்க் கட்சி உறுப்பினராக இருந்தாலும், பல நேரங்களில் அவருடைய

கருத்துக்களுக்கு வரவேற்பு இல்லாது இருந்தபோதிலும், அவற்றினால் எல்லாம் சோர்வடையாமல் உற்சாகமாகவும் நகைச்சுவை ததும்பவும் சக உறுப்பினர்களோடு பேசிக்கொண்டிருப்பார்கள். இந்த அவையிலே நல்ல பல கருத்துக்களைச் சொல்ல வேண்டிய நேரத்திலே எழுந்து சொல்வதில் மாண்புமிகு உறுப்பினர் திரு டி. கே. சண்முகம் அவர்கள் சொல்லியதைப்போல, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு ஒரு உணர்ச்சி ஊட்டுபவராகக்கூட அவர் இருந்தார் என்று சொன்னால் அது மிகை யாகாது. ஒடுக்கப்பட்ட மக்களுடைய, பின் தங்கிய மக்களுடைய குறைகளை அவர் எழுந்து பேசும் ஒவ்வொரு நேரத்திலும் உச்சரித்துக் கொண்டிருந்தார்கள். இயல்பாகவே அவர் பின்தங்கிய வகுப்பிலிருந்து வந்தவராக இருந்தாலும்கூட, அவருடைய உள்ள உணர்வு அதற்கு அப்பாலும் தன்னைச் சார்ந்த மக்கள் மட்டுமல்லாத பிற மக்களுக்கும் கூட போராடும்படியாகத் தூண்டிக்கொண்டிருந்தது என்பதைப் பல சமயங்களிலும் நான் கண்டிருக்கிறேன். ஒரு நல்ல உறுப்பினரை இந்த சபை இழந்துவிட்டது. நமக்கெல்லாம் உற்சாகமும் ஊக்கமும் அளிக்கக்கூடிய ஒரு சகாவை நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறை யில் இழந்துவிட்டதாகவே கருதுகிறோம். அப்படிப்பட்ட நண்பர் அவர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் முதல்வர் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்திற்கு எனது கட்சியின் சார்பில் ஆதரவு தந்து அமருகிறேன்.

* **திரு எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, திரு எத்திராஜுலு அவர்களுக்கு இன்று இவ்வளவு சீக்கிரம் இங்கே ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று யாரும் கனவுகூட கண்டிருக்க முடியாது. சென்ற கூட்டத் தொடர் முடியும்போது அடுத்த கூட்டத் தொடர் இப்படி ஆரம்பிக்கும் என்று ஒருவர் சொல்லியிருப்பாரானால் அதை மதியீனம் என்று நினைப்போம். நடக்காத ஒன்று என்று நாம் கருதுவோம். ஏனென்றால் அவ்வளவு சுறுசுறுப்பாக தேக ஆரோக்கியத் தோடு அவர் காட்சியளித்தார். மனதில் இருப்பதை எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமில்லாதபடி எடுத்துக்கூறுவதில் சிறந்த அங்கத் தினராகப் பணியாற்றினார். அவரிடம் தன்னம்பிக்கை அதிகமாக இருந்தது. அவரும் நானும் சேர்ந்து இந்த மாமன்றத்தின் பிரதி நிதிகளாக அண்ணாமலை யூனிவர்சிடி செனெட்டுக்குச் சென்றிருந்தோம். அப்போது அண்ணாமலை யுனிவர்சிடி செனெட்டில் நண்பர் திரு எத்திராஜுலு வந்து என்ன செய்யப்போகிறார் என்ற ஐயப்பாடு எனக்கிருந்தது. ஆனால் அவர் அங்கே செறுக்குடன் நடந்து கொண்டார். தன்னம்பிக்கையோடு பேசினார். இந்த மன்றத்தில் கூட ஒரு முறை பேசினார். ஒரு அதிகாரி அவரைப் பார்க்க அனுமதிக்க வில்லை என்பதைக் குறிப்பிடும்போது, தானும் மந்திரி சபையில் உட்காருவதற்கு யோக்கியதை உள்ளவன் என்பதை மறந்துவிட்டு அதிகாரி மறுத்ததாகப் பேசினார். ஜனநாயகத்தில் சாதாரண மனிதன் எந்தப் பொறுப்பிற்கும் வரலாம். அதற்கான ஒரு ஆற்றலும் பயிற்சி யும் இருக்க வேண்டுமென்பதை அவருடைய தோற்றத்தில் அவர் காட்டி வந்தார் என்றே தோன்றுகிறது. தனக்குப் படிப்பில்லை என்ற குறையை, பிற்பட்ட சமூகத்தில் பிறந்துவிட்டோமே என்ற குறையை பிறந்த இடம், சமூகம் போன்ற பல குறைகளை எல்லாம் மீறி ஒருவர் மிகுந்த ஆர்வம் உள்ளவராக இருப்பாரானால், சமுதாயத்தில் நல்ல வி த்தில் முன்னேற முடியும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக அவர் இருந்தார். பல்கலைக்கழக செனெட்டில் அவர் நடந்துகொண்ட தோரணை மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவே இருப்பதாகவே நான் கருதுகிறேன். அவருடைய இழப்பு பெரும் இழப்புதான். எதிர்க் கட்சிக்கு பெரிய இழப்பு என்பதைவிட ஆளும் கட்சிக்குத்தான் பெரும் இழப்பு என்று நான் கருதுகிறேன். அவர் பல விஷயங்களைப்பற்றிப் பேசுவதற்கும் அவற்றிற்கெல்லாம் ஆளும் கட்சியிலிருந்து எழுந்து விளக்கம் சொல்வதற்கும் ஒரு சந்தர்ப்பம் இருந்தது. நல்ல ஜன

நாயகம் வாழ்வதற்கும் ஜனநாயகப் பண்பை எடுத்துக் காட்டுவதற்கும் வாய்ப்பாக இருக்கும்பொருட்டு இம்மாதிரியான எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் தேவை என்று நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட எதிர்க் கட்சி உறுப்பினர் ஒருவர் இறந்துவிட்டார் என்பது ஆளும் கட்சிக்குத்தான் ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும். ஆளும் கட்சியினுடைய கொள்கைகளை விளக்குவதற்கும் அவர்களுடைய விதிகளையொட்டி பதில் சொல்வதற்கும் இனி சந்தர்ப்பம் கிடைக்குமா என்று அஞ்சக் கூடிய நிலையில் இருக்கிறோம். அவருக்கு ஒரு குறை உண்டு. பார்க்கும்பொழுதெல்லாம் கேட்பார்கள். அவர் ஒரு சமூகத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு அந்த லட்சியத்திற்காக வாழ்ந்தார். எந்த ஊரைப்பற்றிப் பேச்சுவந்தாலும் கடலூரைப்பற்றிக் கேட்பார். அப்படி அவர் வாழ்ந்த பிராந்தியத்தைப்பற்றியும் பிறந்த சமூகத்தைப் பற்றியும் பேசுவதை லட்சியமாகக் கருதி சேவை செய்தார். அந்த ஒரு குறை அவருக்கு உண்டு. சலவைத் தொழிலாளர்களை "ஷெடியூல்டு காஸ்ட்" பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கை அவருக்கு உண்டு. நண்பர்கள் சொன்னார்கள். இன்னும் அதைப்பற்றி ஏகச் சண்டையாகத்தான் இருக்கிறது. இன்றைக்குக் கூட லோக சபையில் விவாதத்தைப் பார்க்கும்போது, இது முடியாத பிரச்னையாகவும் எதில் யாரைச் சேர்ப்பது, யாரை விடுவது என்பது தெரியாமல் குழப்பமாக இருப்பதையும் அறியமுடிகிறது. விவாதத்தைக் கூட ஒத்திப்போடலாம் என்று இருப்பதாக அறிகிறேன். என்னைப் பார்த்து அவர் பேசும்போது, 'நான் ஒருவன் தான் சலவைத்தொழிலாளர்களைப் பற்றிப் பேசுகிறேன், ஏன் நீங்கள் ஒரு வார்த்தை சொல்லக்கூடாது?' என்று கேட்பார். அதில் நியாயம் இருக்கிறது என்று கருதினால், என்னோடு உங்களுடைய சக்தி முழுவதையும் பிரயோகம் செய்து அதற்கான ஆதரவைத் திரட்ட வேண்டாமா என்று கேட்பார். அந்தக் குறை இனி இல்லாமல் எந்த லட்சியத்திற்காக அவர் வாழ்ந்தாரோ, எந்த லட்சியத்திற்காக அவர் கடைசி மூச்சு உள்ளவரையில் பாடுபட்டாரோ, அதை ஈடேற்றி வைப்பது எல்லோருடைய கடமையாக இருக்கவேண்டுமென்று கூறிக்கொண்டு, முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை நானும் வழிமொழிகிறேன்.

Mr. CHAIRMAN: I fully associate myself with the sentiments expressed by the Hon. the Leader of the House, the Leader of the Opposition and the other hon. Members of the House.

Thiru M. Ethirajulu was a Member of the Tamil Nadu Legislative Council from 1952 to 1962 and from 1964 onwards. He was President, Tamil Nadu Desiya Salavaivalar Sangam and General Secretary, All India Rajak Maha Sangh. He was a Member of the Backward Classes Advisory Committee. He was Editor of 'Salavai Mani' He was a Member of the Senate of the Madras and Annamalai Universities. He took active part in the deliberations of this House and peeaded for the cause of backward community, especially for the welfare of dhobis. In his death, we lost a good friend and a champion of the Backward Communities He was hale and healthy and died unexpectedly after a heart attack He was only 52.

I now request the hon. Members to stand in silence for a couple of minutes and pass the Resolution unanimously.

The Resolution was passed *nem con.*, all the Members standing in silence for a couple of minutes.

4-30 P. m. Mr. CHAIRMAN: The House will now adjourn for the day, as a mark of respect to the late Thiru M. Ethirajulu, and will meet again at 4 p.m on Friday, the 27th November 1970.

The House thenadjourned.